முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1576

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.01.2024,** திங்கட்கிழமை

1. சூட்சும சக்தி மிகு குருராஜனே
சுப்ரமணியர் என் ஞானமாக விளங்கும் தவராஜனே
ஆறுமுக மாட்சிமைமிக்க அரங்கனே
அண்ணலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே சோபகிருது கலைதிங்கள்
(சோபகிருது வருடம் தை மாதம் 08 ம் நாள், 22.01.2024, திங்கட்கிழமை)
உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
ஞானமாக அரங்கன் தர்மம்தான்
நாடெங்கிலும் ஆற்றலாக பரவிவர
3. வருகவே அன்னதான சேவையோடு
வளருகின்ற அரங்கன் மெய்ஞானம்
தர்மலோகமாகி இந்த பேருலகில்
தக்கபடி தண்டாயுதன் என் வெளிப்பாடாக
4. ஆகவே ஞான யுகமாற்றம்
அரங்கனால் அரங்கேறுவது உறுதி உறுதி
ஞானமாக அரங்கன் தரும் தீட்சைபலம்
நம்பிக்கை ஊட்டி கலியுக மக்களுக்கு
5. ஞானவானாக ஞான ஆட்சித்தருகின்ற
ஞானப்படைகளை உருவாக்கும் மகாசக்தியாக
நல்லுலகில் வெளிப்பட்டு இனிதே
நாட்டிடுவேன் உலகமெங்கும் ஞான ஆட்சி
6. ஞானிகளுடைய ஆட்சிக்காலமாக
ஞானதேசிகன் அவதார மகிமையாக
நடந்தேறும் ஞானபண்டிதன் என் அனுகூலத்தால்
நாட்டிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–